


31.05.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவையின் 57 தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் 7-வது இறுதி கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

2. வாக்கு எண்ணும் பணிகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் முனைப்புடன் மேற்கொண்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் அனல் புனல்மின் நிலையங்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலாக மின்உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. உலக புகையிலை எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் அரையிறுதிக்கு ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

தேர்தல்

மக்களவைக்கு நாளை நடைபெறும் 7-வது இறுதி கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

மேற்குவங்கத்தில் - 9 மக்களவை தொகுதிகள்

பீஹாரில் 8, ஒடிஷா - 6

பஞ்சாப், உத்தரபிரதேசம் தலா - 13,

ஹிமாச்சல பிரதேசம் - 4,ஜார்கண்ட் - 3,

சண்டிகட் யூனியன் பிரதேசத்தில் ஒரு மக்களவை தொகுதிக்கு இத்தேர்தல் நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும்.

இத்தேர்தலில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர் திரு. அனுராக்சிங் தாகூர், காங்கிரஸ் கட்சியின் திரு. விக்ரமாதித்ய சிங், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் திரு. அபிஷேக் பானர்ஜி உட்பட 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேர்தல் சுமூகமாக நடைபெறுவதை உறுதிசெய்ய விரிவான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

மொத்தமுள்ள 543 மக்களவை தொகுதிகளில் கடந்த 6 கட்டங்களாக 486 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றுள்ள நிலையில் இறுதி கட்டமாக எஞ்சியுள்ள 57 மக்களவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் தேர்தலுடன் 7 கட்ட வாக்குப்பதிவு நிறைவடைகிறது.

இந்த 7 கட்டங்களிலும் பதிவான, பதிவாகும் வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்படுகின்றன.

□□□□□□□

தேர்தல் ஆணையம்

தமிழ்நாட்டில் வரும் 4-ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணும் பணிகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

வாக்கு எண்ணும் யைமங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் தமிழ்நாடு சிறப்பு படை காவலர்கள்,

மாநில காவல்துறை ஆய்வாளர்கள், காவலர்களின் மூன்றடுக்கு பாதுகாப்பில் வாக்கு எண்ணும் இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தின் 39 மக்களவை தொகுதிகளிலும் வாக்கு எண்ணும் மையங்கள் முழுமையாக கண்காணிப்பு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன

வேட்பாளர்கள் மற்றும் அவர்தம் முகவர்கள் மட்டுமே வாக்கு எண்ணும் மையத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்

திருச்சி மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா. பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

எமது செய்திபிரிவிற்கு அவர் அளித்த பேட்டியில், இம்மையத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டிருப்பதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

தஞ்சாவூர் மாவட்டத்தில் குந்தவை நாச்சியார் அரசு கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தீபக் ஜேக்கப் இன்று ஆய்வுசெய்தார்.

□□□□□□□

பறிமுதல்

நாடுமுழுவதும் மக்களவை தேர்தல் நடைமுறையின் போது வருமான வரித்துறை மேற்கொண்ட சோதனைகளில் மொத்தம் ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்க பணமும், நகைகளம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை நடைபெற்ற மக்களவை தேர்தல்களின் போது இல்லாத அளவாக இந்த தேர்தலில் மிக அதிகளவு தொகை பறிமுதல் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□

பிரதமர்

கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு படகு போக்குவரத்து இன்று நண்பகல் முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி கன்னியாகுமரியில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் பாதுகாப்பு கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

□□□□□□□

ஆதார் பதிவு முகாம்

பான் எண்ணை ஆதாருடன் இணைக்க இன்று கடைசிநாளாகும்.

இதையொட்டி வருமான வரித்துறை சார்பில் சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் திருச்சியில் இன்று நடைபெறுகிறது

இந்நிலையில் தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்படும் தினத்தன்று மாணாக்கருக்கு ஆதார் பதிவு முகாம் நடைபெறும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இம்முகாமின் போது மாணாக்கரின் கைவிரல் ரேகை, கண் கருவிழி ஆகியவை பதிவுசெய்யப்பட்டு ஆதார் அட்டை வழங்கப்படும்.

□□□□□□□□

ராமதாஸ்

தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கத்தை கருத்தில் கொண்டு பள்ளிகள் திறப்பை ஒத்திவைக்க வேண்டுமென்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சமூக வலைதளப்பதிவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணாக்கரின் நலனை கருத்தில் கொண்டு வரும் ஜுன் 2-வது வாரத்தில் பள்ளிகளை திறக்க தமிழக அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

□□□□□□□□

மின்துறை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக 454.32 மில்லியன் யூனிட் மின்சாரம் எவ்வித தடங்கலும் இன்றி சாதனை அளவாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அனல் மற்றும் புனல்மின் நிலையங்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலாக மின்உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் 24 மணிநேரமும் போர்க்கால அடிப்படையில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறுகிய காலத்தில் மின் வினியோகம் சீரமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

□□□□□□□□

சிவ்தாஸ்மீனா

தமிழ்நாட்டில் மக்களவை தேர்தல் நடத்தை விதிமுறைகள் திரும்ப பெறப்பட்ட பின்னர் தலைமை செயலாளர் திரு. சிவ்தாஸ்மீனா தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் வரும் 11-ம் தேதி தொடங்குகிறது

மண்டலங்கள் வாரியாக நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வரும் 13-ம் தேதி திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

□□□□□□□□

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழ்நாட்டில் அனைத்து துறைகளிலும் காலி பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி மாநில அரசை வலியுறுத்தினார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் போக்குவரத்து, கைத்தறி, மருத்துவம், ஆசிரியர் கூட்டமைப்பு சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

□□□□□□□

வெள்ளையத்தேவன்

சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவனின் 255-வது பிறந்த தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அவரது திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

□□□□□□□

உலக புகையிலை எதிர்ப்பு தினம்

உலக புகையிலை எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

புகை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்நாளில் புகையிலை எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து சென்னை செல்லும் விழிப்புணர்வு ஸ்கேட்டிங் ஓட்டத்தை ஆட்சித் தலைவர் திரு. மா.பிரதீப்குமார் இன்று காலை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

புகையிலை பயன்பாட்டிலிருந்து எதிர்கால தலைமுறையினரை காக்கவேண்டியது அவசியம் என்று திருச்சியை சேர்ந்த புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கோவிந்தராஜ் எமது செய்திபிரிவிடம் பேசுகையில்...

.. வாய்ஸ் ..

அரியலூர் ரயில் நிலையத்தில் புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு திருச்சி ரயில்வே கோட்ட மருத்துவத்துறை மற்றும் காவல்துறையினர் சார்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

புகையிலை பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை முறைகள், புகையிலையை தவிர்க்க வேண்டியதன் அவசியம் உள்ளிட்டவை குறித்து துண்டு பிரசுரங்கள் ரயில் பயணிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

□□□□□□□□

திருவாரூர் விவசாயிகள்

திருவாரூர் மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணற்று பாசன நீரை பயன்படுத்தி, கோடை நெல் அறுவடை பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் குறைந்த விலையில் விற்கப்படும் தரமான மரக்கன்றுகளை விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் கேட்டுக் கொண்டுள்ளார்.

□□□□□□□□

வானிலை

தமிழ்நாட்டில் நாளைமுதல் வரும் 4-ம் தேதிவரை கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்றுகாலை ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

குற்றால அருவிகளில் நீர்வரத்து சீரடைந்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

□□□□□□□□

ரயில்

பயணியர் கூட்ட நெரிசலை தவிர்க்க நாகர்கோவில் - சென்னை இடையே அதிவேக சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

வரும் 2, 16, 30 ஆகிய தேதிகளில் நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து இரவு 11:15-க்கு புறப்படும் இந்த ரயில் மறுநாள் காலை 11:15க்கு சென்னை சென்றடையும்.

மறுமார்க்கத்தில் சென்னையிலிருந்து அடுத்த மாதம் 3, 17 மற்றும் ஜுலை 1 ஆகிய தேதிகளில் பிற்பகல் 3 மணிக்கு புறப்படும் இந்த ரயில் மறுநாள் அதிகாலை 3.15க்கு நாகர்கோவில் சென்றடையும்.

□□□□□□□

பேட்மிண்டன்

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது

காலிறுதி ஆட்டத்தில் இன்று இந்த இணை தென் கொரிய இணையை 21-18, 21-19, 24-22 என்ற செட்கணக்கில் வென்றது.

□□□□□□□

கிரிக்கெட்

ஐ.சி.சி ஆடவர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டிகள் வரும் 2-ம் தேதிமுதல் 29-ம் தேதிவரை அமெரிக்காவிலும், வெஸ்ட் இண்டீசில் நடைபெற உள்ளன.

முதன்முறையாக 4 பிரிவுகளில் 20 நாடுகள் இப்போட்டியில் களமிறங்குகின்றன.

ஏ - பிரிவில் இந்தியா, பாகிஸ்தான் கனடா அயர்லாந்து அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

நியூயார்க்கில் வரும் 5-ம் தேதி இந்தியா தனது முதல் போட்டியில் அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

முன்னதாக இந்தியா பங்களாதேஷ் இடையேயான பயிற்சி ஆட்டம் வரும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.